(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 103.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2021 நவம்பர் 08, திங்கட்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1913/2021

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டச் செயலகத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2198/2021

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1624/2021

கௌரவ உத்திக பிரேமரத்ன,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு ஆண்டும் பெரும்போக காலத்தில் ஏற்படும் மழைவீழ்ச்சியின் போது மல்வத்து ஓயா பெருக்கெடுப்பதனால் அநுராதபுர நகரிற்கு வெள்ள அச்சுறுத்தல் ஏற்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி வெள்ள அச்சுறுத்தலைக் குறைப்பதற்காக கடந்த அரசாங்கத்தினால் மல்வத்து ஓயா அபிவிருத்திக் கருத்திட்டமென்ற பெயரில் கருத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி கருத்திட்டம் செயற்பாட்டு நிலையிலுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதன் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் நிறுத்தப்பட்டிருப்பின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டம் மீள ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வெள்ளம் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் மல்வத்து ஓயாவிற்கும் அநுராதபுர நகரிற்கும் அருகாமையில் வசிக்கும் மக்களை அதிலிருந்து பாதுகாப்பதற்கான புதிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4\.

785/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை தேசிய கல்வியியல் கல்லூரிகளில் உரிய பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்வியியல் கல்லூரி வாரியாகவும், விடய வாரியாகவும் தனித்தனியாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவர்களுக்கு மத்தியில் இதுவரை இலங்கை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) ஏனையோரை இலங்கை ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5\.

1649/2021

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் கொழும்பு மாவட்ட தேசிய பாடசாலைகளுக்கென —

(i) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் யாவையென்பதையும்;

(ii) புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தரம் 6 இற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவ/மாணவிகளின் எண்ணிக்கையில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் மீது தீர்மானிக்கப்பட்ட வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 5 மற்றும் 6 ஆந் தரத்தில் காணப்பட்ட சமாந்தர வகுப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

ஒவ்வொரு ஆண்டு ரீதியாக தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6\.

469/2020

கௌரவ மொஹமட் முஸம்மில்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வோர் ஆண்டிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோர் ஆண்டிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, குறித்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொர் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்ட புத்தாக்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காப்புரிமை அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்றப்பட வேண்டிய முறையியல் யாதென்பதையும்;

(ii) புத்தாக்க முயற்சிகளில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்கள் முகங்கொடுக்கும் நிதி ரீதியான சிரமங்களைக் குறைப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

439/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்குரிய திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு திணைக்களத்தின், கூட்டுத்தாபனத்தின் மற்றும் ஏனைய நிறுவனத்தின் அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் முகவரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்களுள் தனியார் கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) அக்கட்டிடங்களுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி அமைச்சிற்குரிய சகல நிறுவனங்களையும் அரசாங்கக் கட்டிடங்களில் தாபிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1929/2021

கௌரவ எச். நந்தசேன,— பிரதம அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமோதய ஜனகலா கேந்திரயவில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1721/2021

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 வரையில் —

(i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதற்கென செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத வீடுகளின் எண்ணிக்கையானது மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் நிறைவு செய்யப்படாத வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வீடமைப்பின்போது வழங்கப்பட்ட பணத் தொகையானது, கடன் தொகையாக வழங்கப்பட்டதா அல்லது உதவித் தொகையாக வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) கடனாக வழங்கப்பட்டிருப்பின், கடன் தவணை சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கடன் தவணை செலுத்தாதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்தில் கடன் தவணை செலுத்தாதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1087/2020

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகூருணர்வு மிக்க சூழல் கட்டமைப்பான வத்தளை சதுப்பு நிலப்பிரதேசத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கழிவு அகற்றப்படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக அச்சூழல் கட்டமைப்பிலுள்ள தாவரங்களுக்கும் உயிரினங் களுக்கும் மிக பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) வத்தளை சதுப்பு நிலப்பிரதேசத்திற்கு கழிவு அகற்றப்படுவதை தடுப்பதற்கும், அச்சூழல் கட்டமைப்பை பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1863/2021

கௌரவ பிரேமலால் ஜயசேகர,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் தோட்டத் தொழிலாளர்களின் நலன்புரிக்காக நிறைவேற்றப்படும் வகிபங்கு யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் கீழ் இயங்கிவரும் பிரதேச அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வலுவலகங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு பிரதேச அலுவலகத்தினாலும் செயற்படுத்தப்பட்ட ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் அமைச்சிடமிருந்து கோரப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்கென பிரதேச அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களினாலும் சேவை வழங்கப்படும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளின் அளவானது நியாயமான முறையில் பங்கிடப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1278/2020

கௌரவ திஸ்ஸ அத்தநாயக,— வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நடப்பு அரசாங்கத்தினால் வெளிநாட்டுத் தூதுவர் சேவைக்கு அல்லது இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்ட தூதுவர்கள் அல்லது உயரிஸ்தானிகர்களது பெயர்கள் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நாடுகளின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி தூதுவர்கள் அல்லது உயரிஸ்தானிகர்கள் நியமிக்கப்பட்டபோது அவர்களது வெளிநாட்டு சேவைக்கான அனுபவங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இலங்கை சார்பாக ஈடேற்ற வேண்டிய செயற்பொறுப்பு மேற்படி தூதுவர்களுக்கு அல்லது உயரிஸ்தானிகர்களுக்கு துல்லியமாக ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவர்கள் அச்செயற்பொறுப்பினை ஈடேற்றுகின்றனரா என்பது தொடர்பில் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1395/2021

கௌரவ திலிப் வெதஆரச்சி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1977 ஆம் ஆண்டில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சகல குளிரூட்டல் அறைகளிலும் காணப்பட்ட மீன்களை களஞ்சியப்படுத்தக் கூடிய கொள்ளளவு கிலோகிராம்களில் எவ்வளவென்பதையும்;

(ii) செயலிழந்த நிலையில் காணப்பட்ட கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டல் அறைகளை புனரமைப்பதற்காக கடந்த அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்சமயம் இப்புனரமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்படுள்ளனவா என்பதையும்;

(iv) தற்சமயம் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் சகல குளிரூட்டல் அறைகளிலும் மீன்களை களஞ்சியப்படுத்தக்கூடிய கொள்ளளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1671/2021

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மீன்பிடித் துறைமுகங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மீன்பிடித் துறைமுகங்களுள் தற்போது மணல் நிறைந்து காணப்படுகின்ற மீன்பிடித் துறைமுகங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) அந்த மீன்பிடித் துறைமுகங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி மீன்பிடித் துறைமுகங்களில் நிறைந்துள்ள மணலை அகற்றுவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

2278/2021

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

16.

894/2020

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் "எக்ஸ்போர்ட்ஸ் 2000" எனும் பெயரில் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படுகின்றதா;

(ii) மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்றளவில் அடையாளம் காணப்பட்டுள்ள ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iv) மேற்படி ஏற்றுமதியாளர்களின் மத்தியில் காணப்படுகின்ற பெண் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

17.

673/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர்களாக பணியாற்றியுள்ள ஒவ்வொரு நபரினதும் பெயர் மற்றும் அவர் பணியாற்றியுள்ள காலவரையறை என்பன யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு பயிற்றுவிப்பாளருக்கும் செலுத்தப்பட்டுள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை;

(iii) இலங்கை தேசிய கிரிக்கெட் அணி மேற்படி ஒவ்வொரு பயிற்றுவிப்பாளரினதும் கீழ் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் அடைந்துள்ள வெற்றிகள் மற்றும் தோல்விகளின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கென பயிற்றுவிப்பாளரொருவரைத் தெரிவு செய்கையில் பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

18.

1690/2021

கௌரவ குமார வெல்கம,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போதுள்ள கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றுள் களுத்துறை மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) களுத்துறை மாவட்டத்தில் உள்ள கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் வருடாந்தம் வழங்கப்பட்ட நிதியுதவிகள் ஒவ்வொரு வருடத்திற்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாடசாலை கிரிக்கெட் விளையாட்டையும் ஏனைய பாடசாலை விளையாட்டுக்களையும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வேலைத்திட்டம் தற்போது களுத்துறை மாவட்டத்தில் உள்ள எந்தப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

19.

674/2020

கௌரவ ஹேஷா விதானகே,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்துக்கும் சப்ரகமுவ மாகாண சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி யாது;

(iii) மேற்படி முத்திரைக் கட்டணங்களின் பெறுமதியை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் செலுத்துவதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

20.

907/2020

கௌரவ இஷாக் ரஹுமான்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அனுராதபுரம், தலாவ நகரின் பேருந்து தரிப்பிடத்தின் கட்டிடங்கள் மிகவும் பழமையான மற்றும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) மழை நாட்களில் மேற்படி பேருந்து தரிப்பிடம் பயணிகளுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பேருந்து நிலையத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

21.

978/2020

கௌரவ வேலு குமார்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவலப்பிட்டி நகரசபையில் பணியாற்றும் ஊழியர்களின் பாவனைக்காக நாவலப்பிட்டி நகர எல்லைக்குள் "சொய்சாகலை" பிரதேசத்தில் கூட்டு வீடமைப்புத் தொகுதியொன்று உள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கூட்டு வீடமைப்புத் தொகுதியின் தொடக்கத்தில் அங்கு அமைக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அங்கு குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி வீடமைப்புத் தொகுதியில் உள்ள பதிவு இலக்கங்களையும் மின்சார வசதிகளையும் கொண்ட வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) மேற்படி வீடுகளில் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கூட்டு வீடமைப்புத் தொகுதிக்குப் பதிலாக புதிய வீடமைப்புக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு கடந்த காலத்தில் திட்டமிடப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

22.

2271/2021

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கென —

(i) அங்கீகரிக்கப்பட்ட மொத்த தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை;

(ii) அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர் பதவிகளின் எண்ணிக்கை;

(iii) தற்போது சேவையாற்றும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை;

(iv) தற்போது சேவையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களின் எண்ணிக்கை;

வெவ்வேறாக எத்தனை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி தொழிலாளர் பதவிகளில் வெற்றிடம் அல்லது மிகை காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அந்த வெற்றிடங்கள் அல்லது மிகை தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

23.

3007/2021

கௌரவ எம்.எஸ்.தௌபீக்,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1995.07.01 ஆம் திகதி முதல் பல அமைச்சர்களின் தனிப்பட்ட பணியாட்டொகுதிகளில் (ஓய்வூதிய சுற்றறிக்கை இலக்கம் 06/2011 இற்கமைய ஓய்வூதிய உரித்துடைய பதவிகளில்) பதினைந்து வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய, ஜனாப். எம். நயீமுல்லாஹ் (ஒய்வூதிய இலக்கம் 01-802666) இறுதியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(ii) ஜனாப். நயீமுல்லாஹ் இறுதியாக பெற்றுக்கொண்ட அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு அவரது ஓய்வூதியத்தைத் தயாரிப்பதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) அப்போதைய நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சுச் செயலாளரின் 01/10/04/05 (1) ஆம் இலக்கமும் 2019.07.08 ஆம் திகதியும் கொண்ட, ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட கடிதத்திற்கு அமைவாக ஜனாப். நயீமுல்லாஹ்வின் ஓய்வூதியத்தை முறையாக கணிப்பீடு செய்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

24.

945/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) "இட்டுகம்ம கொவிட் - 19 சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியம்" எனும் பெயரில் நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை;

(ii) மேற்படி நிதியத்தை நிருவகிக்கும் நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) மேற்படி நிதியத்தை நிருவகிப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா;

(iv) ஆமெனில், குறிப்பிட்ட உத்தியோகத்தரின் பெயர் மற்றும் பதவி என்பவை யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட நிதியத்தில் தற்போது காணப்படும் நிலுவை யாது;

(ii) கொவிட்-19 தொற்று காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேற்குறிப்பிட்ட நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள நன்மைகள் யாவை;

(iii) அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

25.

825/2020

கௌரவ சாந்த பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சியம்பலன்கமுவ பிரதேசத்தில் சிறுநீரக நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வைத்தியசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) கல்கமுவ மற்றும் பொல்பித்திகம பிரதேசங்களில் வசிக்கும் பெருமளவிலானோர் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) ஆயினும், மேற்குறிப்பிட்ட வைத்தியசாலை 03 ஆண்டுகளுக்கும் மேலாக மூடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) மேற்படி வைத்தியசாலையை துரிதமாகத் திறந்து சிறுநீரக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

26.

994/2020

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம ஆதார வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி மற்றும் அவ்வைத்தியசாலையில் தற்போதுள்ள பதவியணி என்பன ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக எத்தனை;

(ii) மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான மனித வளத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

27.

1080/2020

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த 05 வருட காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் பதிவாகிய சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி காலப்பகுதியில் பொலன்னறுவை மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் மரணித்த நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) சிறுநீரக நோயினைத் தடுப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட, சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த நிதியுதவி வழங்கும் வேலைத்திட்டத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள சிறுநீரக நோயாளர்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையும்;

(ii) குறைந்த வருமானம் பெறும் சிறுநீரக நோயாளர்களுக்கான வீடமைப்புத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்படி (ஆ) (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

28.

1200/2020

கௌரவ கே.பீ.எஸ்.குமாரசிறி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அநுராதபுரம் பெரியாஸ்பத்திரியில் —

(i) பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ள அடிப்படை யாது;

(ii) தற்போது பணியாற்றுகின்ற வைத்தியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) தற்போது பணியாற்றுகின்ற தாதிமார்களின் எண்ணிக்கை யாது;

(v) தற்போது காணப்படுகின்ற தாதியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் (JICA) நன்கொடையின் கீழ் அநுராதபுரம் வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த இருதயநோய் சத்திரசிகிச்சைக்கூடத்தின்;

(ii) தாய் சேய் சாய் சாலைக்கான கட்டிடத் தொகுதியின்;

(iii) அனைத்து வசதிகளையும் கொண்ட அவசர சிகிச்சை பிரிவின்;

தற்போதைய நிலைமை என்ன என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

29.

2267/2021

கௌரவ வசந்த யாப்பா பண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வைத்தியசாலைகளுக்கான வகைப்படுத்தலுக்கமைவாக கடுகன்னாவ அரசாங்க வைத்தியசாலை உள்வாங்கப்படும் வகை யாதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் பிரேத அறை உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றுகின்ற சாதாரண மருத்துவர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பேராதனை போதனா வைத்தியசாலையிலிருந்து சேவைகளைப் பெறுகின்றனர் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) பேராதனை வைத்தியசாலையிலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் காணப்படுகின்ற அதிக தேவையை குறைக்கும் நடவடிக்கையாக கடுகன்னாவ அரசாங்க வைத்தியசாலையை, ஓர் ஆதார வைத்தியசாலையாக மாற்றியமைப்பதற்குத் திட்டமிடப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) கொட்டலிகொட, இலுக்தென்ன மற்றும் தொடம்வல கிராமிய வைத்தியசாலைகளை நவீனமயப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

30.

2976/2021

கௌரவ அசோக்க பிரியந்த,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண சுகாதார அமைச்சினால் நிருவகிக்கப்படுகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிப் பெயருக்கமைவாக தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

31.

2178/2021

கௌரவ காமினி வலேபொட,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் வெகுசன ஊடக விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

32.

295/2020

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பிரம்பு உற்பத்தி கைத்தொழிலாளர்கள் இன்றளவில் அக்கைத்தொழிலை விட்டு ஒதுங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதிலும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதிலும் பிரச்சினைகள் காணப்படுகின்றதென்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிலின் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்ட முடியுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் பிரம்பு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டில் அதன் மூலம் ஈட்டப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வருமானம் யாதென்பதையும்;

(iii) இலங்கையின் பிரம்பு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படாத பட்சத்தில் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கையில் பிரம்பு உற்பத்திகளுக்கென சந்தையை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

33.

842/2020

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(ii) குறித்த தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) அதற்கென முதலீடு செய்யப்பட்ட தொகை மற்றும் திகதியையும்;

(iv) அதன் மூலம் உருவாக்கப்படும் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தொழிற்சாலை தொடர்பில் ஊழல் மற்றும் மோசடி இடம்பெறுவதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

34.

615/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட கருத்திட்ட உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்ட உதவியாளர்கள் இணைக்கப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் இதர நியதிச் சட்ட நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்ட உதவியாளர்களின் பணி இன்றளவில் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

35.

1827/2021

கௌரவ வடிவேல் சுரேஷ்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி மதுபான விற்பனை நிலையங்களில் அதிகமானவை பெருந்தோட்டங்களில் அல்லது அவற்றை அண்மித்ததாக நடாத்திச் செல்லப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறு நடாத்திச் செல்லப்படும் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதுளை மாவட்டத்தில் நடாத்திச் செல்லப்படும் மதுபான விற்பனை நிலையங்களில் பெரும்பாலானவை மத வழிபாட்டுத் தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு அருகாமையில் நடாத்திச் செல்லப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) பெருந்தோட்டங்களைச் சார்ந்ததாக வாழ்கின்ற மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நடாத்தப்பட்டு வருகின்ற மதுபான விற்பனை நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

36.

1909/2021

கௌரவ ஜகத் புஷ்பகுமார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களத்தில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

37.

1919/2021

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பிரதேச அபிவிருத்தி வங்கியில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதித்தொகை மற்றும் சொத்துக்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி புலனாய்வுகளின் மூலம் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய முறைகேடுகள், முறையற்ற நியமனங்கள், ஊழல் செயற்பாடுகள் அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

38.

1406/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் தீவுப் பகுதிகளில் இல்மனைட்டு அகழ்வுக்காக ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஹெமர்ஸ்மித் லங்கா, ஓரியண்ட் மினரல்ஸ், சனூர் மினரல்ஸ், ஹில் சைட் எக்ஸ்ப்ளோரேஷன், சுப்ரீம் சொலூஷன்ஸ் மற்றும் வரையறுக்கப்பட்ட ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்பச் சேவைகள் தனியார் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) டைட்டானிக் சாண்ட்ஸ் லிமிடெட் எனும் அவுஸ்திரேலிய கம்பனி மன்னார் தீவுப் பகுதியில் இல்மனைட்டு அகழ்வுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளதாகவும் விரைவில் அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதென்பதையும்;

(iii) ஆய்வு நடவடிக்கைகளுக்காக மன்னாரின் பேசாலை கிராமத்திலிருந்து 20 மணல் கொள்கலன்கள் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டதென்பதையும்;

(iv) மன்னார் தீவின் தரை மட்டமும் கடல் மட்டமும் சாதாரணமாக ஒரு சமமாக காணப்படுவதால் மணல் அகழ்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் இத்தீவு அழிவடையும் நிலை ஏற்படக்கூடுமெனவும்;

அவர் அறிவாரா?

(ஆ) மன்னார் தீவில் மணல் அகழ்வு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

39.

779/2020

கௌரவ கே. காதர் மஸ்தான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வவுனியா மாவட்டம், வெங்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகப் பிரிவுக்குச் சொந்தமான சூடுவெந்தபுலவு கிராமத்திற்கு அண்மித்ததாக அமைந்துள்ள இராசேந்திரக் குளம் கிராமத்திலுள்ள அரச காணிகளை 1970 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பிரதேச மக்கள் சேனைப் பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) காணி ஆணையாளர் நாயகத்தின் 2013/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் படி, மேற்குறிப்பிட்ட மக்கள் மத்தியில் காணிக் கச்சேரி மூலம் உரிமங்களைப் பெறுவதற்கு தகுதியானவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு ஏற்கனவே உரிமங்களைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தெரிவுசெய்யப்பட்ட சகலருக்கும் உரிமங்களை வழங்குவதில் காணப்படும் இடையூறுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி இடையூறுகளை நீக்கி, தெரிவுசெய்யப்பட்ட சகலருக்கும் உரிமங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

40.

1796/2021

கௌரவ றோஹண திஸாநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மாத்தளை, எல்கடுவையில் அமைந்துள்ள ஹகரன்கந்தவத்த எனப்படும் காணியிலிருந்து 105 ஏக்கர்கள், காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவினால் தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி காணியில் காணப்படுகின்ற பலா மற்றும் கினிசப்பு போன்ற மரங்களை வெட்டி விற்பனை செய்வதற்கு மேற்படி குத்தகையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இது வரையில் வெட்டி விற்பனை செய்யப்பட்டுள்ள மரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி மரங்களின் நிதி ரீதியான பெறுமதி யாதென்பதையும்;

(v) மேற்குறித்த காணியானது முறையாக குத்தகைக்கு வழங்கப்படாதிருப்பின், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாதெனின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

41.

569/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படும் எரிபொருள் தரையிறக்கப்படும் போது ஏற்பட்ட தாமதங்களின் காரணமாக 2015 முதல் 2020 வரையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் குறித்த கப்பல் கம்பனிகளுக்குச் செலுத்தப்பட்டுள்ள தாமதக் கட்டணம் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி தாமதக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஏதுவான காரணிகள் யாவை;

(iii) இலங்கைக்கு கப்பல்கள் மூலம் ஏற்றி வரப்படும் எரிபொருள் தரையிறக்கப்படும் போது ஏற்படும் தாமதங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

42.

2274/2021

கௌரவ டீ. வீரசிங்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் பெற்றோலிய வளங்கள் பற்றிய விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

43.

2517/2021

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை ஏற்றுமதியின் மூலம் இலங்கை ஈட்டும் வருமானம், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

(ii) கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்படி வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி எவ்வளவென்பதையும்;

(iii) தேயிலை ஏற்றுமதியின் மூலம் 2021 ஆம் ஆண்டில் ஈட்டிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவென்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்படி வருமானம் அதிகரித்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச தேயிலை சந்தையை சீனா மற்றும் கென்யா போன்ற நாடுகள் ஆக்கிரமித்துள்ளதன் விளைவாக இலங்கை இழந்து வரும் சர்வதேச சந்தைப் பங்கைப் பாதுகாத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) "சிலோன் டீ" எனும் வணிகச் சின்னத்தை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை தேயிலைக்கு புதிய சர்வதேச சந்தைகளைக் கண்டறிவதற்கும் தற்போதுள்ள சந்தையை விரிவுபடுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

44.

1105/2020

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பெருந்தோட்டத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெங்கு செய்கை துரிதமாக வீழ்ச்சியடைந்து வருகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) தெங்குச் செய்கையினை மேம்படுத்துவதற்கு —

(i) புதிய காணிகளில் தெங்கு செய்கையினை மேற்கொள்வதற்கு தெங்குச் செய்கையாளர்களுக்கு மானியம் வழங்குவதற்கும்;

(ii) காணப்படுகின்ற தெங்குச் செய்கைக்கிடையே தேங்காய் மட்டைகளை புதைத்தல், வடிகான்களை நிர்மாணிப்பதற்கு மானியம் வழங்குவதற்கும்;

(iii) தெங்கு உரத்தை இலவசமாக வழங்குவதற்கும்;

(iv) புதிய காணிகளில் தெங்குச் செய்கையினை செய்விப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கும்;

நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

45.

324/2020

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவர வகையினங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பன்னத்தாவர வகையினங்கள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவர வகையினங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவரங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான பன்னத்தாவரங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

46.

1631/2021

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சட்டம் என்பது, ஒரு நாட்டில் வாழுகின்ற பிரசைகளை, முறையான நடத்தை மற்றும் செயற்பாடுகளுடன்கூடிய குழுவினராக நிர்வகிப்பதன் மூலம் சமூக நலனின் பொருட்டு பின்பற்றப்படுகின்ற சட்டமுறை விதிகளின் தொகுப்பாகும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் அமைந்துள்ள காதி நீதிமன்றங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி நீதிமன்றங்களை அமைத்ததன் பிரதான நோக்கம் யாது;

(iii) தற்போது மேற்படி நோக்கம் நிறைவேறியுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) காதி நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமனம் செய்யும் முறையியல் யாது;

(ii) இன்றளவில் காதி நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகள் மேற்குறித்த முறையியலுக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ளனரா;

(iii) காதி நீதிமன்றமொன்றை நடாத்திச் செல்வதற்காக அதன் நீதிபதி மற்றும் கட்டிடங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

47.

2534/2021

கௌரவ அஸோக அபேசிங்ஹ,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்குரியதாக காணப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரை பணிக்கொடை செலுத்தப்படவுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி நிலுவை பணிக்கொடையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

48.

1402/2020

கௌரவ டப்ளியு. எச். எம். தர்மசேன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையமானது வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வ/ப புத்தல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இன்றளவில் இயங்கி வருகின்றது என்பதையும்;

(ii) 2021.02.19 ஆம் திகதியுடன் முடிவடைகின்றதான அது சம்பந்தப்பட்ட வாடகை உடன்படிக்கையை நீடிக்காதிருப்பதற்கு வ/ப புத்தல பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது என்பதையும்;

(iii) பொலிஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒக்கம்பிட்டிய நகரில் ஒதுக்கப்பட்டுள்ள காணி இதுவரை பயன்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் குறித்த பொலிஸ் நிலையத்தை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) இல்லையெனில், மேற்படி பொலிஸ் நிலையத்தைப் பேணிவருதற்காக எதிர்பார்க்கப்படும் மாற்று இடம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

49.

946/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு, மடத்துவெளி வரையிலான பாலம் இலங்கையில் அமைந்துள்ள நீளமான பாலங்களில் ஒன்றென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நீளம் யாதென்பதையும்;

(ii) மேற்படி பாலம் இறுதியாக புனரமைக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை யாதென்பதையும்;

(iv) அதற்கான நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி பாலத்தினூடாகப் பயணிப்பது அபாயகரமானது என்பதையும்;

(ii) பொது மக்களும் பெரும் எண்ணிக்கையிலான வாகனங்களும் பயணிக்கின்ற இந்தப் பாலத்தின் மீது பல விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பாலம் பூரணமாக புனரமைக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

50.

2599/2021

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையில் நெடுஞ்சாலைகள் விடயப்பொறுப்பு அமைச்சராகப் பணியாற்றிய ஒவ்வொரு அமைச்சரினதும் பெயர் மற்றும் பதவிக்காலம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அமைச்சரும் தமது பதவிக்காலத்தில் நியமித்துள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரினதும் பெயர், வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஒவ்வொரு ஆலோசகருக்கும் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டிருந்த ஏனைய வசதிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆலோசகருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த பொறுப்புகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு ஆலோசகரும் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்கள், அவ்வாறு வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டமைக்கான காரணங்கள், அதற்காக செய்யப்பட்ட செலவு மற்றும் அதன் மூலமாக அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

வர்த்தக அமைச்சர்,— மஹபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தம்),— 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 2247/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

தொழில் அமைச்சர்,— பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2021.10.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

காணி அமைச்சர்,— காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (460 ஆம் அத்தியாயமான) காணி எடுத்தற் சட்டத்தின் 63(2)(ஊ) ஆம் பிரிவின் கீழ் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2244/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

கைத்தொழில் அமைச்சர்,— தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 14(1)(ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுடன் உடன் வாசிக்க வேண்டிய, 53 ஆம் பிரிவின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண உரிமக் கட்டணம் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 மார்ச் 02 ஆம் திகதிய 2165/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் அச்சுப் பிழைகள் திருத்தப்பட்டு, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 53 இன் கீழ் கைத்தொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 ஏப்ரல் 01 ஆம் திகதிய 2221/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புச் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு, மின்சாரவேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் மற்றும் காடு மீள்வளர்ப்பு அத்துடன் காட்டு வள அபிவிருத்தி உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்தல் இராஜாங்க அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2222/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

சுற்றுலாத்துறை அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2020 செப்தெம்பர் 08 ஆம் திகதிய 2192/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

ஒதுக்கீடு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(தஅ) மற்றும் (தஆ) ஆம் பிரிவுகளின் கீழ் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2019 யூன் 03 ஆம் திகதிய 2126/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

கடற்றொழில் அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 12 ஆம் திகதிய 2218/64 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நீதி அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2021 மே 03 ஆம் திகதிய 2226/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.10.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2021 யூலை 08) [1].

* 17.

நிதி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மே 06 ஆம் திகதிய 2226/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.06.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பிரதம அமைச்சர் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் திட்டச் செயற்படுத்துகை அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து 2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் பதவி வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் செயற்படுத்துதல்,—

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு ஏற்புடைய அமைப/21/0105/301/003 ஆம் இலக்க, 2021.02.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:—

(அ) சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை (அதன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளையும், எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பையும் உள்ளடக்கிய) பிரேரணை அங்கீகாரமொன்றினூடாக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ஆ) அந்த இறுதி அறிக்கையின் முதலாம் தொகுதியின் 08 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்புக் குழு சம்பந்தமாக அந்த ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள தீர்மானங்களையும், சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்;

(இ) குறித்த 08 ஆம் இலக்க விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் இலக்கத் தீர்மானம் மற்றும் 1 ஆம் இலக்க சிபாரிசு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினை நியமித்தல் அல்லது பாராளுமன்றத்தினால் அதற்காக விதித்துரைக்கப்படும் பிற பொருத்தமான வழிமுறையொன்றினை மேற்கொள்ளுதல்;

(ஈ) மேற்குறித்த விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தொகுதிகளில் மற்றும் அந்த இறுதி அறிக்கையின் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பில் 08 ஆம் இலக்க விடயத்திலும் 09 ஆம் இலக்க விடயத்தில் I முதல் LXI வரையிலுமுள்ள முறைப்பாடுகளுக்கு உரியதாக அந்த ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை இலஞ்ச அல்லது ஊழல் முறைப்பாடுகள் பற்றி புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் உரிய அமைச்சுக்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் உரிய அதிகாரிகளுக்கும் அனுப்புதல்; மற்றும்

(உ) குறித்த இறுதி அறிக்கையின் மூன்றாம் தொகுதியில் 10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் குறிப்பிடப்படும் முறைப்பாடுகளுக்கு உரியதாக குறித்த சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் நடைமுறைப்படுத்தல்

அதற்கேற்ப, மேலே (இ) இல் குறிப்பிடப்பட்டவாறு 2221/54 ஆம் இலக்க, 2021.04.01 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையினால், மேற்குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உள்ளடங்கியுள்ள 08 ஆம் இலக்க விடயத்தின் தீர்மானங்கள் மற்றும் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்த பின்பு கருத்திற்கொள்வதற்கு உட்பட்ட வகையில் குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளையும் எழுத்துப் பிழைகள் மற்றும் அச்சுப் பிழைகள் என்பவற்றைத் திருத்தும் பின் இணைப்பினையும் உள்ளடக்கிய) 08 ஆம் இலக்க விடயத்தைத் தவிர்த்து 09 மற்றும் 10 ஆம் இலக்க விடயங்களில் உள்ளடங்கியுள்ள தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேலே (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்ற பிரேரணை நிறைவேற்றுமாக.

19.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.